**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : STC 147-2025 |
| Deposition of witness for | (Old No.419/2024) |
| | Prosecution : LW6- PW6 |
| | Defence : |
| Name : வெங்கடேசன் | Court : |
| | Father's Name: சத்ருவன் |
| Village : கீழ்பென்னாத்தூர் | Husband Name: |
| | Taluk : |
| | Calling : |
| | Age : 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04.02.2026

எதிரி ஆஜர்

(சாட்சி கீழ்பென்னாத்தூர் தலைமைக் காவலர் திரு.விஜயகுமார் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டார்)

**முதல் விசாரணை**

நான் தற்போது கீழ்பென்னாத்தூரில் வசித்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். அசா5 ரஞ்ஜித் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான் முதலாவது கையெழுத்து ரஞ்ஜித்குமார் என்னுடையது ஆகும். மேற்படி கையெழுத்தை நான் சுமார் 3 வருடத்திற்கு முன்பு கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்திற்கு வெளியே நான் இருந்தபோது போலிசார் காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என தெரியாது. பார்வை மகசரில் உள்ள 2வதாக உள்ள எனது கையொப்பம் **அசாஆ 3** ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு நீதிமன்றத்தின் அனுமதி பெற்று அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

ஆஜர் எதிரி எனக்கு நன்கு பழக்கமான என் ஊரை சேர்ந்தவர். போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் நான் போலிசார் விசாரணையில் 07.12.2021 இரவு 2 மணிக்கு என் முன்பும் ரஞ்ஜித் குமார் முன்பும் கீழ்பென்னாத்தூர் கோட்டான் ஏரிக்கரை கன்னிமார் கோவில் அருகே கீழ்பென்னாத்தூர் காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து தயார் செய்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : STC 147-2025 |
| Deposition of witness for | (Old No.419/2024) |
| | Prosecution : LW5- PW5 |
| | Defence : |
| Name : ரஞ்ஜித் குமார் | Court : |
| | Father's Name: |
| Village : கீழ்பென்னாத்தூர் | Husband Name: அண்ணாமலை |
| | Taluk : |
| | Calling : |
| | Age : 38 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04.02.2026

எதிரி ஆஜர்
(சாட்சி கீழ்பென்னாத்தூர் தலைமைக் காவலர் திரு.விஜயகுமார் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டார்)

**முதல் விசாரணை**

நான் தற்போது கீழ்பென்னாத்தூரில் வசித்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். பட்டியல் சாட்சி 6 வெங்கடேசனை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது, 2வது கையொப்பம் பட்டியல் சாட்சி 6 வெங்கடேசன் உடையது. சுமார் 1 வருடத்திற்கு முன்பு கீழ்பென்னாத்தூரில் உள்ள கன்னிமார் கோவில் அருகே அவலூர்பேட்டை செல்வதற்காக நானும் பட்டியல் சாட்சி 6 வெங்கடேசனும் மதிய வேலையில் சென்று கொண்டு இருந்தோம். அங்கு கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய போலிசார் அந்த இடத்தை பார்வயைிட்டு விபத்து குறித்து படம் வரைந்து அது குறித்து எழுதிய தாளில் நானும் வெங்கடேசனும் கையொப்பம் செய்தோம். மேற்படி பார்வை மகசர் அசாஆ 2 ஆக குறயீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

பார்வை மகசரில் கையெழுத்து செய்தது எப்போது செய்தேன் என்றால் 1 வருடத்திற்கு முன்பாக செய்தேன். நான் பார்வைமகசரில் ஒரு கையெழுத்தை தான் போட்டேன் என்றாலும் வேறு எந்தவொரு கையெழுத்தும் போடவில்லை என்றாலும் சரிதான். வெங்கடேசனும் பார்வைமகசரில் ஒரு கையெழுத்தை தான் போட்டார் என்றாலும் வேறு எந்தவொரு கையெழுத்தும் போடவில்லை என்றாலும் சரிதான்.

நான் எத்தனை பேப்பரில் கையெழுத்து போட்டேன் என்றால் ஒரு பேப்பரில் தான் போட்டேன் அதில் என்ன எழுதியிருந்தது என்றால் எனக்கு படித்து மேற்படி விபத்தை பற்றி படம் வரைந்ததாக என்னிடம் சொன்னார்கள். நான கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தை ஒட்டியுள்ள ஆட்டோ ஸடேண்டில் நானும் வெங்கடேசனும் ஆட்டோ ஓட்டி வருகிறோம் என்றால் சரிதான்.

நான் காவல் துறையின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிகொடுத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மீது பல வழக்குகள் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் உள்ளது என்றால் சரிதான். அதனால் தான் போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்